ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2352/29 - 2023 ඔක්තෝබර් මස 05 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.10.05

*2352/29 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.-பி. 24/ 51*(VII)

**(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டம்**

*(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் பிரிவுகள் 21, 22, 23, 24 மற்றும் 24அ என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**கலாநிதி பந்துல குணவர்தன,**
போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர்.

கொழும்பு
*2023, ஒற்றோபர் 04.*

**ஒழுங்குவிதிகள்**

*1952 பெப்புருவரி 27 ஆந் தேதிய 10,360 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2017 ஓகத்து 18 ஆந் தேதிய 2032/ 36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளால் கடைசியாகத் திருத்தப்பட்டவையுமான 1951 ஆம் ஆண்டின் மோட்டார் வாகன (நானாவித) ஒழுங்குவிதிகள் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன:-*

(1) அவ்வொழுங்குவிதிகளின் 10 ஆம் ஒழுங்குவிதியில்-

(அ) அவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியில், “(1) அடையாளங்காண் இலக்கத்தகடு” எனும் இலக்கத்துக்கும் சொற்களுக்கும் பதிலாக “அடையாளங்காண் இலக்கத்தகடு” எனும் சொற்களை இடுவதன் மூலம்; அத்துடன்

(ஆ) அவ்வொழுங்குவிதியின் (2) பந்தியை நீக்குவதன் மூலம்;


*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*(2)* அவ்வொழுங்குவிதிகளின் *11* ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் ஒழுங்குவிதியை இடுவதன் மூலமும்:-

"*11.* இவ்வொழுங்குவிதிகளுக்கான மூன்றாம் அட்டவணையின் பகுதி "அ" தொடக்கம் பகுதி "உ" வரையில் தரப்பட்டுள்ள வரைபடங்களில் விளக்கப்படும் இவ்வொழுங்குவிதிகளுக்கான முதலாம் அட்டவணையின் பகுதி "அ" இன் நிரல்கள் I, II மற்றும் III இலும் பகுதி "ஆ" இன் நிரல்கள் I, II மற்றும் III இலும் விவரிக்கப்பட்டுள்ள மோட்டார் வாகனங்களின் வகுதிகளின் அடையாளங்காண் இலக்கத்தகடுகளானவை இவ்வொழுங்குவிதிகளுக்கான இரண்டாம் அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ளதான பின்வரும் குறித்துரைப்புக்களுடன் அமைந்தொழுகுதல் வேண்டும்: -

(அ) இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசின் மரபுச் சின்னம் தரப்பட்டுள்ள குறித்துரைப்புக்களைக்கொண்ட ஒளி தெறிக்கும் உயர்தர தகட்டில் இடது மேல் மூலையில் பதிக்கப்பட்டும் குறித்துரைக்கப்பட்ட பாதுகாப்பு அம்சங்கள் சேர்க்கப்பட்டிருத்தலும் வேண்டும்;

(ஆ) குரோமிய மூலத்தைக் கொண்ட பாதுகாப்பு முத்திரை அடையாளங்காண் இலக்கத்தகட்டின் பந்தி (அ) வில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள மரபுச்சின்னத்திற்கு வலது-பக்க மூலையின் மீது வெப்ப முத்திரையிடப்படுதல் வேண்டும்; அத்துடன்

(இ) இலங்கையின் இராசதந்திர பணிகளுக்கு சொந்தமான மோட்டார் வாகனங்களுக்கான எழுத்துக்கள் "DP", மற்றும் ஐக்கிய நாடுகளினுடைய ஒழுங்கமைப்புகளுக்கு அல்லது இலங்கையிலுள்ள எவையேனும் அதன் முகவராண்மைகளுக்குச் சொந்தமான மோட்டார் வாகனங்கள் எனும் வடயத்தில், எழுத்துக்கள் "UN" என்பன இவ்வொழுங்குவிதிகளுக்கான மூன்றாம் அட்டவணையின் பகுதி ஆ இலுள்ள வரைபடங்கள் ஆ*1* முதல் ஆ5 வரையில் மற்றும் பகுதி ஈ இலுள்ள வரைபடங்கள் ஈ*1* முதல் ஈ5 வரையில் விளக்கப்பட்டவாறு மரபுச்சின்னத்திற்குக் கீழே பொறிக்கப்படுதல் வேண்டும்.";

*(3)* அவ்வொழுங்குவிதிகளின் *18* ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்கு பதிலாக பின்வரும் ஒழுங்குவிதியை இடுவதன் மூலமும்:-

"*18. (1)* அடையாளங்காண் இலக்கத்தகட்டின் எழுத்துக்கள், உருக்கள் மற்றும் இலக்கங்கள்-

(அ) அரசாங்கம் அல்லது பகுதியான அரசாங்க நிறுவனங்கள் அல்லது ஐக்கிய நாடுகளினுடைய ஒழுங்கமைப்பு அல்லது இலங்கையிலுள்ள அதன் எவையேனும் முகவராண்மைகளுக்குச் சொந்தமான மோட்டார் வாகனங்கள் அல்லாத ஏதேனும் மோட்டார் வாகனம்-

(i) கறுப்பு வெப்ப முத்திரை பொறிக்கப்பட்டு அல்லது அழுத்தப்பட்டிருத்தல் வேண்டும்; அல்லது

(ii) கறுப்பு வெப்ப முத்திரை பொறிக்கப்பட்டு அல்லது குரோமட்டிக் சகிதம் "DMT" யுடன் செதுக்கப்பட்டிருத்தல் வேண்டும்;

(ஆ) அரசாங்கம் அல்லது பகுதியான அரசாங்கத்துக்கு சொந்தமான ஏதேனும் மோட்டார் வாகனம்-

(i) நீல (நிறக் குறியீடு RAL*5013*) வெப்ப முத்திரை பொறிக்கப்பட்டு அல்லது அழுத்தப்பட்டிருத்தல் வேண்டும்; அல்லது

(ii) கறுப்பு (நிறக் குறியீடு RAL*5013*) வெப்ப முத்திரை பொறிக்கப்பட்டு அல்லது குரோமட்டிக் சகிதம் "DMT " யுடன் செதுக்கப்பட்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) ஐக்கிய நாடுகளுடைய ஒழுங்கமைப்புக்கள் அல்லது இலங்கையிலுள்ள அதன் எவையேனும் முகவராண்மைகளுக்குச் சொந்தமான ஏதேனும் மோட்டார் வாகனம்-

(i) நீல (நிற குறியீடு பென்டோன் PMS *279*) வெப்ப முத்திரை பொறிக்கப்பட்டு அல்லது அழுத்தப்பட்டிருத்தல் வேண்டும்; அல்லது

(ii) நீல (நிற குறியீடு பென்டோன் PMS *279*) வெப்ப முத்திரை பொறிக்கப்பட்டு அல்லது குரோமட்டிக் சகிதம் "DMT " செதுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(2) ஒரூாம் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள மோட்டார் வாகனங்களின் அடையாளங்காண் இலக்கத்தகட்டின் எழுத்துக்கள், உருக்கள் மற்றும் இலக்கங்கள் அவ்வுட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள பின்வரும் முறையில் முத்திரை பொறிக்கப்பட்டு அல்லது அழுத்தப்பட்டிருத்தல் வேண்டும்-

(i) முன்புற அடையாளங்காண் இலக்கத்தகடு எனும் சந்தர்ப்பத்தில், வெண் நிற பின்னோக்கி பிரதிபலிக்கும் பின்னணி; அத்துடன்

(ii) பின்புற அடையாளங்காண் இலக்கத்தகடு எனும் சந்தர்ப்பத்தில், பின்னோக்கிப் பிரதிபலிக்கும் மஞ்சள் நிறப் பின்னணி.";

(4) அவ்வொழுங்குவிதிகளின் 19 ஒழுங்குவிதியில்-

(அ) அவ்வொழுங்குவிதியின் (2) ஆம் பந்தியில்-

(i) "அவ்வொழுங்குவிதிகளுக்கான இரண்டாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள வரைபடங்களில் நன்கு காட்டப்பட்டும் இருத்தல் வேண்டும்." எனும் சொற்களுக்குப் பதிலாக "இவ்வொழுங்கு விதிகளுக்கான மூன்றாம் அட்டவணையின் பகுதி உ இல் தரப்பட்டுள்ள E1 மற்றும் E2 வரைபடங்களில் நன்கு விளக்கப்பட்டிருத்தலும் வேண்டும்." எனும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(ii) அப்பந்தியின் விடயம் (iii) இனை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் விடயத்தினை இடுவதன் மூலமும்:-

"(iii) அந்தந்த மோட்டார் வாகனத்துக்கு குறித்தளிக்கப்பட்டவாறு ஒழுங்குவிதி 21ஆ இல் குறித்துரைக்கப்பட்டவாறு மாவட்ட அடையாளங்காண் எழுத்தாக ஒரு எழுத்தும், மாவட்ட அடையாளங்காண் எழுத்துக்குப் உடனடுத்துவரும் இரண்டு எண்கள் அடையாளங்காண் இலக்கத்தகடுகள் வழங்கப்பட்ட ஆண்டின் கடைசி இரண்டு எண்களை குறிப்பிடுவனவாக ஒரு கோடு மற்றும் ஒரு கோட்டிற்கு உடனடுத்துப்பின்னர் நான்கு இலக்கங்கள்;";

(ஆ) அவ்வொழுங்குவிதியின் (3) ஆம் பந்தியில், "அந்த ஒழுங்குவிதிகளுக்கான முதலாம் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறான அத்தகைய விவரக்கூற்றுக்களுக்கிணங்கியதாக இருத்தல் வேண்டும்." எனும் சொற்களுக்குப் பதிலாக "இவ்வொழுங்குவிதிகளுக்கான இரண்டாம் அட்டவணையில் நன்கு விவரிக்கப்பட்டிருத்தலும் வேண்டும்." எனும் சொற்களைப் இடுவதன் மூலமும்."; அத்துடன்

(இ) அவ்வொழுங்குவிதியின் (4) ஆம் பந்தியை நீக்குவதன் மூலம்;

(5) அவ்வொழுங்குவிதிகளின் ஒழுங்குவிதி 20 இனை நீக்கிவிட்டு பின்வரும் ஒழுங்குவிதியினை இடுவதன் மூலம்:-

"20. (1) ஒழுங்குவிதி 19 இல் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள மோட்டார் வாகனங்கள் தவிர்ந்த எல்லா மோட்டார் வாகனங்களுக்கும் மோட்டார் வாகனப் பதிவு அடையாளங்காண் இலக்கத்தகட்டு ஒட்டுத்துண்டொன்று (இதனகத்துப்பின்னர் "ஒட்டுத்துண்டு" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இவ்வொழுங்குவிதிகளுக்கான நான்காம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய கட்டணங்களின்மேல் வழங்கப்படுதல் வேண்டும்.

(2) ஒரூாம் பந்தியின்கீழ் வழங்கப்பட்ட ஒட்டுத்துண்டானது மோட்டார் சைக்கிள்கள், கை உழவு இயந்திரங்கள் அல்லது தரை வாகனங்களுக்கானதெனில், ஒட்டுத்துண்டானது கீழே தரப்பட்டுள்ளதான வகைப்பாடுகளையும் இவ்வொழுங்குவிதிகளுக்கான ஐந்தாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள வரைபடம் 1 இல் நன்கு விவரிக்கப் பட்டிருப்பதுமானவற்றுடன் அமைந்தொழுகுதல் வேண்டும்: -

(அ) ஒட்டுத்துண்டானது 100மிமி x 18மிமி அளவில் நீள்சதுர வடிவிலிருத்தல் வேண்டுமென்பதுடன் நீண்டகாலம் நிலைத்திருக்கக்கூடிய பாதுகாப்பு பசையிடப்பட்டிருத்தல் வேண்டும்;

(ஆ) ஒட்டுத்துண்டானது–

(i) இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் மரபுச் சின்னத்தை வலது மூலையில் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ii) நடுவில் வானொலி அலைவரிசை அடையாளங்காண் (இதனகத்துப்பின்னர் RFID பட்டி எனக் குறிப்பீ செய்யப்படும்) பட்டி; அத்துடன்

(iii) மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் இலச்சினையை இடது மூலையில் கொண்டிருத்தல் வேண்டும்;

(இ) ஒட்டுத்துண்டானது வரிசை, சுய-பிரித்தழிவு விளைவுடனான வானொலி அலைவரிசை அடையாளங்காண் (RFID) பட்டி, வெளித்தெரியும் அச்சிடப்பட்ட ஒட்டுத்துண்டு, வெளித்தெரியும் அச்சிடப்பட்ட படலம் மற்றும் வெளித்தெரியும் உச்ச படலம் என்பவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்; மற்றும்

(ஈ) மோட்டார் வாகனப் பதிவு இலக்கம், ஒழுங்குவிதி 21அ வில் குறித்துரைக்கப்பட்டவாறாக xவ்வொரு மாகாணத்திற்கும் குறித்தளிக்கப்பட்ட இரு மாகாண அடையாளங்கான எழுத்துக்கள் மற்றும் அடிப்பீட இலக்கம் என்பன நேர்க்கணிய UHF RFID பட்டியில் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(3) ஒட்டுத்துண்டானது மோட்டார் வாகனத்தின் தலைவிளக்கிற்கு வெளியில் மேலாக துலாம்பரமான ஓருிடத்தில் ஒட்டப்படுதல் வேண்டும். மோட்டார் வாகனத்திற்கு இரு தலை விளக்குகள் காணப்படுமிடத்து, ஒட்டுத்துண்டானது இடதுபக்க மேற்புறத்திற்கு தலைவிளக்கிற்கு வெளியில் எவ்வாறாயினும், துலாம்பரமான ஓருிடத்தில் ஒட்டப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், மோட்டார் வாகனத்திற்கு முன்பக்கத்தில் தலை விளக்குகள் இல்லாதவிடத்து, ஒட்டுத்துண்டானது மோட்டார் வாகனத்திற்கு இடதுபக்க மேற்புறத்திற்கு வெளியில் துலாம்பரமான ஓருிடத்தில் ஒட்டப்படுதல் வேண்டும்.

(4) பந்தி (1) இன் கீழ் வழங்கப்பட்ட ஒட்டுத்துண்டானது பந்தி (2) இல் குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் அல்லாத மோட்டார் வாகனங்களுக்கானதெனில், ஒட்டுத்துண்டானது கீழே தரப்பட்டுள்ள வகைப்பாடு களையும் இவ்வொழுங்குவிதிகளுக்கான ஐந்தாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள வரைபடம் 2 இல் நன்கு விவரிக்கப் பட்டிருப்பதுமானவற்றுடன் அமைந்தொழுகுதல் வேண்டும்:-

(அ) ஒட்டுத்துண்டானது 86மி.மி. x 54மி.மி. அளவில் நீள்சதுர வடிவிலிருத்தல் வேண்டும் என்பதுடன் நீண்டகாலம் நிலைத்திருக்கக்கூடிய பாதுகாப்பு பசையிடப்பட்டிருத்தல் வேண்டும்;

(ஆ) ஒட்டுத்துண்டானது–

(i) இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் மரபுச் சின்னத்ததை இடது பக்க மேல் மூலையில் கொண்டிருத்தல் வேண்டும்;

(ii) மேல் மத்தியில் RFID சுட்டுத்துண்டு;

(iii) மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் இலச்சினையை வலது பக்க மேல் மூலையில் கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(iv) கீழ்ப்புற மத்தியில் தனிப்பட்ட தரவுகளுக்காக 60 மி.மி. x 20மி.மி. அளவிலான பகுதி;

(இ) ஒட்டுத்துண்டின் அடிப்பாகமானது படலத்துடனும், RFID பதிப்பு பொறிக்கப்பட்டதாகவும், படலத்தில் பாதுகாப்பு அம்சங்கள் அச்சிடப்பட்டதாகவும், வெளித்தெரியும் தனியமைப்பு சுய-பிரித்தழிவு படலமானது உச்ச படலத்தையும் தனிப்பட்ட தரவுகளை கொண்டதாகவும் காணப்படுதல் வேண்டும்;

(ஈ) ஒட்டுத்துண்டானது கிராபிக் தனியமைப்பு முன்னச்சாகவிருக்கவேண்டிய கறுப்பு நிற சட்டகத்தினுள் நுண் எழுத்துருவான "DMT" இன் பாதுகாப்பு அம்சங்களை கொண்டிருத்தல் வேண்டும். வெளித்தெரியும் தனியமைப்பின் மீதான படங்கள் புறஊதாக்கதிர்களிற்கு மாத்திரமே புலப்படக்கூடியதாக காணப்படவேண்டும் என்பதுடன் தனியமைப்பானது ஒட்டுத்துண்டின் முற்றுமுழுதான மேற்பரப்பிலுமாக காணப்படவேண்டும்;

(உ) தனிப்பட்ட பகுதி உள்ளடக்கியிருக்கவேண்டிய எழுத்துக்கள் அல்லது உருக்களுமானவை பின்வருமாறு இருக்கும் பட்சத்தில்-

(i) ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்தளிக்கப்பட்டவாறான மோட்டார் வாகனப் பதிவு இலக்கம்;

(ii) மோட்டார் வாகனத்தின் வகுதி;

(iii) எரிபொருளை அடையாளங்காணும் எழுத்தினை குறிப்பிடும் பெற்றோல் மோட்டார் வாகனங்களுக்கு "P" எனவும் டீசல் மோட்டார் வாகனங்களுக்கு "D" எனவும் மின்சார வலுவூட்டப்பட்ட மோட்டார் வாகனங்களுக்கு "E" எனவும் திரவப் பெற்றோலிய வாயு மோட்டார் வாகனங்களுக்கு "G" எனவும் பன்முக எரிபொருள் மோட்டார் வாகனங்களுக்கு "M" எனவுமான எழுத்துக்கள்;

(iv) முதலாவதுப் பதிவு ஆண்டு;

(v) QR குறியீடு; அத்துடன்

(vi) அவசியமேற்படுமிடத்து, இலங்கையின் இராசதந்திர பணிகளுக்கு சொந்தமான மோட்டார் வாகனங்களுக்கான எழுத்துக்கள் "DP", மற்றும் ஐக்கிய நாடுகளினுடைய ஒழுங்கமைப்புகளுக்கு அல்லது இலங்கையிலுள்ள அதன் எவையேனும் முகவராண்மைகளுக்குச் சொந்தமான வாகனங் களுக்கான எழுத்துக்கள் "UN"; அத்துடன்

(ஊ) RFID அலகானது உட்பந்தி (ஈ) இல் குறித்துரைக்கப்பட்ட அம்சங்களிற்கு மேலதிகமாக அடிப்பீட இலக்கத்தையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

(5) நான்காம் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒட்டுத்துண்டானது அரசிறை உரிமத்தின் மேல் வளித்தடுப்புக் கண்ணாடியின் உட்புற இடப்பக்க மேல் மூலையில் துலாம்பரமான ஓரிடத்தின் மீது ஒட்டப்படுதல் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், மோட்டார் வாகனத்திற்கு வளித்தடுப்புக் கண்ணாடி இல்லாதவிடத்து, ஒட்டுத்துண்டானது மோட்டார் வாகனத்தின் வெளியில் இடதுபுற மேற்புறத்தில் துலாம்பரமான ஓரிடத்தின்மீது ஒட்டப்படுதல் வேண்டும்.

(6) இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்திற்காக-

"தனியமைப்பு சுய-பிரித்தழிவு படலம்" என்பது தனியமைப்பு ஒட்டப்பட்ட இடத்தில் எஞ்சியிருப்பதும் பின்தரவு அடையாளங்காண் அம்சங்களை அழிக்காது அகற்றப்பட முடியாததுமான உலோகத்தினாலான படலம்;

"நேர்க்கணிய UHF வானொலி அலைவரிசை அடையாளங்காண் (RFID) பட்டி" என்பது வானொலி அலைவரிசை அடையாளங்காண் (RFID) வாசிப்புமானியிலிருந்து பரிமாறப்பட்ட சக்தியினால் வலுவேற்றப்படும் மின்கலமற்ற பட்டி எனப்பொருள்படும்;

"வானொலி அலைவரிசை அடையாளங்காண் பதிப்பு (RFID) வானொலி அலைவரிசை அடையாளங்காண் (RFID) என்பது சுட்டுத்துண்டுகளாக செய்முறைப்படுத்தப்படுவதற்கென ஒரு அடிமூலக்கூறொன்றின் மீது அல்லது திரை முகப்பின் மீது இடப்பட்ட வானொலி அலைவரிசை அடையாளங்காண் (RFID) துண்டு மற்றும் அலைக்கம்பம் எனப் பொருள்படும்;

"வானொலி அலைவரிசை அடையாளங்காண் (RFID) பட்டி" என்பது வானொலி அலைவரிசைகளை பயன்படுத்தி வானொலி அலைவரிசை அடையாளங்காண் வாசிப்புமானியுடன் தரவுகளை பரிமாறிக்கொள்ளுவதான மின்பட்டி எனப்பொருப்படும்; அத்துடன்

"வெளித்தெரியும் அச்சிடப்பட்ட படலம்" அல்லது "வெளித்தெரியும் உச்ச படலம்" என்பது ஒரு தெளிவான, வலுவான, இலகுநிறையுடைய மற்றும் பொலிதைலின் வெரெப்தலேட்டினால் உருவாக்கப்பட்ட முழுதும் மீள்சுழற்சிக்குட்படுத்தக்கூடியதும் வானொலி அலைவரிசை அடையாளங்காண் பட்டியில் அச்சிடுவதற்காக அதிஉச்ச படலாமாக பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் படலம் என பொருள்படும்;";

(6) அவ்வொழுங்கு விதிகளின் ஒழுங்குவிதி 21ஆ இனை உடனடுத்துப் பின்னராக பின்வரும் ஒழுங்குவிதியை சேர்ப்பதுடன் அவ்வொழுங்கு விதியானது ஒழுங்குவிதி 21இ என பயனுறுதலும் வேண்டும் :-

“21இ. மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் தலைமையதிபதி இவ்வொழுங்குவிதிகளின்கீழ் இலக்கத்தகடுகள் மற்றும் ஒட்டுத்துண்டுகளை விநியோகிக்கவும், மீளப்பெறவும், இடைநிறுத்தவும் அல்லது இரத்துச்செய்யவும் தனியதிகாரம் கொண்டவராதல் வேண்டும்.”; அத்துடன்

(7) அவ்வொழுங்குவிதிகளுக்கான முதலாம் அட்டவணை, இரண்டாம் அட்டவணை, மூன்றாம் அட்டவணை மற்றும் நான்காம் அட்டவணைகளை நீக்கிவிட்டு, அவற்றுக்குப்பதிலாகப் பின்வரும் அட்டவணைகளை இடுவதன் மூலமும்:-

“முதலாம் அட்டவணை

பகுதி “அ”

(ஒழுங்குவிதிகள் 8, 11 மற்றும் 19)

ஒவ்வொரு மோட்டார் வாகன வகுப்பிற்கு ஏற்புடையதான மூன்றாம் அட்டவணையிலுள்ள அடையாளங்காண் இலக்கத் தகட்டுகளின் வரைபட இலக்கங்கள் (ஐக்கிய நாடுகள் முகவராண்மைகள் மற்றும் இராசதந்திர பணிகளுக்குச் சொந்தமான மோட்டார் வாகனங்கள் தவிர்ந்த)

| | நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|---|
| | மோட்டார் வாகன வகுப்பு | இரண்டு ஆங்கில எழுத்துக்கள், ஒரு கோடு மற்றும் நான்கு உருக்களுடன் அடையாளங்காண் இலக்கத் தகடுகளுக்கு ஏற்புடைமையாகும் வரைபட இலக்கம் | மூன்று ஆங்கில எழுத்துக்கள் மற்றும் நான்கு உருக்களுடன் அடையாளங்காண் இலக்கத் தகடுகள் ஏற்புடைமையாகும் வரைபட இலக்கம் |
| 1. | மோட்டார் சைக்கிள் | A4 அல்லது A5 | C4 அல்லது C5 |
| 2. | கை உழவு இயந்திரங்கள் | A4 | C4 |
| 3. | மோட்டார் முச்சக்கர வண்டிகளும் மோட்டார் முச்சக்கர வேன்கள் | A1 அல்லது A4 | C1 அல்லது C4 |
| 4. | மேலேயுள்ள இந்நிரலிலுள்ள 1, 2 மற்றும் 3 ஆம் விடயங்களில் குறிப்பீடு செய்யப்பட்டவை தவிர்ந்த எல்லா மோட்டார் வாகனங்களும் | A1, A2 அல்லது A3 | C1, C2 அல்லது C3 |

பகுதி “ஆ”

ஐக்கிய நாடுகளினுடைய முகவராண்மைகள் மற்றும் இராசதந்திர பணிகளுக்குச் சொந்தமான மோட்டார் வாகனங்களுக்கு மட்டும் ஏற்புடைமையாகும் மூன்றாம் அட்டவணையிலுள்ள அடையாளங்காண் இலக்கத் தகடுகளின் வரைபட இலக்கங்கள்

| | நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|---|
| | மோட்டார் வாகன வகுப்பு | இரண்டு ஆங்கில எழுத்துக்கள், ஒரு கோடு மற்றும் நான்கு உருக்களுடன் அடையாளங் காண் இலக்கத் தகடுகளுக்கு ஏற்புடைமையாகும் வரை பட இலக்கம் | மூன்று ஆங்கில எழுத்துக்கள் மற்றும் நான்கு உருக்களுடன் அடையாளங்காண் இலக்கத் தகடுகள் ஏற்புடைமையாகும் வரைபட இலக்கம் |
| 1. | மோட்டார் சைக்கிள் | B4 அல்லது B5 | D4 அல்லது D5 |
| 2. | கை உழவு இயந்திரங்கள் | B4 | D4 |
| 3. | மோட்டார் முச்சக்கர வண்டிகளும் மோட்டார் முச்சக்கர வேன்கள் | B1 அல்லது B4 | D1 அல்லது D4 |
| 4. | மேலேயுள்ள இதற்கான நிரல் 1, 2 மற்றும் 3 ஆம் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவற்றுக்கு மேலதிகமான எல்லா மோட்டார் வாகனங்களும் | B1, B2 அல்லது B3 | D1, D2 அல்லது D3 |

## இரண்டாம் அட்டவணை

(ஒழுங்குவிதி 8,11 மற்றும் 19)

மூன்றாம் அட்டவணையின் பகுதி “அ” தொடக்கம் பகுதி “உ” வரையிலான வரைபடங்களில் விளக்கப்பட்டுள்ள அடையாளங்காண் இலக்கத் தகடுகளின் குறித்துரைப்புக்கள்

(எல்லாப் பரிமாணங்களும் மில்லிமீற்றறில் தரப்பட்டுள்ளன)

| நிரல் I | நிரல் II | நிரல் III | நிரல் IV | நிரல் V | நிரல் VI | நிரல் VII | நிரல் VIII | நிரல் IX |
|---|---|---|---|---|---|---|---|---|
| மூன்றாம் அட்டவணை யிலுள்ள வரைபட இல. | அடையாளங் காண் இலக்கத் தகட்டின் அளவு, அதன் 1% ஏற்றத் தாழ்வுடன் கவனிக்கப் படாது | மரபுச் சின் னத்தின் உயரமும் அகலமும் | “DP”, “UN” மற்றும் மாகாண அடையாளங் காண் எழுத் துக்களின் உயரம், அகலம் மற்றும் தடிப்பம் (வரைபட இலக்கங்கள் B1-B5, D1-D5, மற்றும் E1 மற்றும் E2 மட்டும்) | பாது காப்பு முத்திரை ஆரம் | கோட்டின் அகலம் மற்றும் தடிப்பம் | எழுத்துக் களின் உயரம், அகலம் மற்றும் தடிப்பம் | ஆண்டை அடையாளங் காண் இலக்கம் தவிர இலக்கங் களின் உயரம், அகலம் மற்றும் தடிப்பம் | எரிபொருள் வகை அடையா ளங் காணும் எழுத்துக்க ளின் அல்லது ஆண்டை இனங் காணும் இலக்கங் களின் உயரம், அகலம் மற்றும் தடிப்பம் (வரைபடம் E1 மற்றும்E2) |
| A1, B1, C1, D1 | 520 X 110 | 35 X 25 | 40 X 20 X 6 | 20 | 45 X 9 | 75 X 47.5 X 12 | 75 X 45 X 12 | - |
| A2, B2, C2, D2 | 280 X 200 | 35 X 25 | 40 X 20 X 6 | 20 | 45 X 9 | 75 X 47.5 X 12 | 75 X 45 X 12 | - |
| A3, B3, C3, D3 | 280 X 180 | 35 X 25 | 40 X 20 X 6 | 20 | 38 X 7 | 75 X 47.5 X 12 | 75 X 45 X 12 | - |
| A4, B4, C4, D4 | 240 X130 | 30 X 20 | 35 X 18 X 5 | 20 | 30 X 7 | 50 X 30 X 7 | 50 X 25 X 7 | - |
| A5, B5, C5, D5 | 300 X 80 | 25 X 17 | 28 X 15 X 5 | 20 | 25 X 7 | 49 X 26.5 X 8 | 49 X 25 X 8 | - |
| E1 | 520 X110 | 35 X 25 | 40 X 20 X 6 | 20 | 45 X 9 | 75 X 47.5 X 12 | 75 X 45 X 12 | 60 X 35 X 9 |
| E2 | 280 X180 | 35 X 25 | 40 X 20 X 6 | 20 | 45 X 9 | 75 X 47.5 X 12 | 75 X 45 X 12 | 60 X 35 X 9 |

**மூன்றாம் அட்டவணை,**


[ஒழுங்குவிதிகள் *8*, *11* மற்றும் *19*]

**பகுதி அ**

**இரண்டு ஆங்கில எழுத்துக்கள், ஒரு கோடு மற்றும் நான்கு உருக்களுடனான அடையாளங்காண் இலக்கத் தகடுகளினது பரிமாணங்களை விளக்கும் வரைபடங்கள்**


**வரைபடம் அ1**

(அனைத்து பரிமாணங்களும் மில்லிமீற்றர்களில்)





**வரைபடம் அ2**

(அனைத்து பரிமாணங்களும் மில்லிமீற்றர்களில்)




***வரைபடம் அ3***

(அனைத்து பரிமாணங்களும் மில்லிமீற்றர்களில்)





***வரைபடம் அ4***

(அனைத்து பரிமாணங்களும் மில்லிமீற்றர்களில்)



**வரைபடம் அ5**

(அனைத்து பரிமாணங்களும் மில்லிமீற்றர்களில்)





**பகுதி ஆ**

இரண்டு ஆங்கில எழுத்துக்கள், ஒரு கோடு மற்றும் நான்கு இலக்கங்களுடனான இலங்கையின் இராசதந்திர பணிகளுக்கு சொந்தமான வாகனங்களுக்கான அல்லது ஐக்கிய நாடுகள் ஒழுங்கமைப்புக்கள் அல்லது இலங்கையிலுள்ள அதன் ஏதேனும் முகவராண்மைகளுக்குச் சொந்தமான மோட்டார் வாகனங்களுக்கான அடையாளங்காண் இலக்கத்தகடுகளின் பரிமாணங்களை விளக்கும் வரைபடங்கள்


**வரைபடம் ஆ1**

(அனைத்து பரிமாணங்களும் மில்லிமீற்றர்களில்)




**வரைபடம் ஆ2**

(அனைத்து பரிமாணங்களும் மில்லிமீற்றர்களில்)





**வரைபடம் ஆ3**

(அனைத்து பரிமாணங்களும் மில்லிமீற்றர்களில்)




**வரைபடம் ஆ4**

(அனைத்து பரிமாணங்களும் மில்லிமீற்றர்களில்)




**வரைபடம் ஆ5**

(அனைத்து பரிமாணங்களும் மில்லிமீற்றர்களில்)




### பகுதி இ

மூன்று ஆங்கில எழுத்துக்கள் மற்றும் நான்கு உருக்களுடனான வாகனங்களுக்கான அடையாளங்காண் இலக்கத்தகடுகளின் பரிமாணங்களை விளக்கும் வரைபடங்கள்


**வரைபடம் இ 1**

(அனைத்து பரிமாணங்களும் மில்லிமீற்றர்களில்)





**வரைபடம் இ 2**

(அனைத்து பரிமாணங்களும் மில்லிமீற்றர்களில்)




**வரைபடம் இ3**

(அனைத்து பரிமாணங்களும் மில்லிமீற்றர்களில்)





**வரைபடம் இ4**

(அனைத்து பரிமாணங்களும் மில்லிமீற்றர்களில்)



**வரைபடம் இ5**

(அனைத்து பரிமாணங்களும் மில்லிமீற்றர்களில்)





**பகுதி ஈ**

மூன்று ஆங்கில எழுத்துக்கள் மற்றும் நான்கு இலக்கங்களுடனான இலங்கையின் இராசதந்திர பணிகளுக்கு சொந்தமான மோட்டார் வாகனங்களுக்கான அல்லது ஐக்கிய நாடுகள் ஒழுங்கமைப்புகள் அல்லது இலங்கையிலுள்ள அதன் எவையேனும் முகவராண்மைகளுக்குச் சொந்தமான மோட்டார் வாகனங்களுக்கான அடையாளங்காண் இலக்கத்தகடுகளின் பரிமாணங்களை விளக்கும் வரைபடங்கள்


**வரைபடம் ஈ1**

(அனைத்து பரிமாணங்களும் மில்லிமீற்றர்களில்)




**வரைபடம் ஈ2**

(அனைத்து பரிமாணங்களும் மில்லிமீற்றர்களில்)





**வரைபடம ஈ3**

(அனைத்து பரிமாணங்களும் மில்லிமீற்றர்களில்)




**வரைபடம் ஈ4**

(அனைத்து பரிமாணங்களும் மில்லிமீற்றர்களில்)




**வரைபடம் ஈ5**

(அனைத்து பரிமாணங்களும் மில்லிமீற்றர்களில்)




**பகுதி உ**

இவ்வொழுங்குவிதிகளுக்கான ஒழுங்குவிதி 19 இல் குறிப்பீடுசெய்யப்பட்ட வாகனங்களுக்கான அடையாளங்காண் இலக்கத்தகடுகளின் பரிமாணங்களை விளக்கும் வரைபடங்கள்


**வரைபடம் உ1**

(அனைத்து பரிமாணங்களும் மில்லிமீற்றர்களில்)




**வரைபடம் உ2**

(அனைத்து பரிமாணங்களும் மில்லிமீற்றர்களில்)



**நான்காம் அட்டவணை**

[ஒழுங்குவிதிகள் 9 மற்றும் 20(1)]

**அடையாளங்காண் இலக்கத்தகடுகளை வழங்குவதற்கான கட்டணங்கள்**

| | *நிரல் **I*** | *நிரல் **II*** |
|---|---|---|
| | *விவரணம்* | *கட்டணம் (ரூபா)* |
| *1.* | இலக்கத் தகடுகளின் முன்புற, பின்புற தொகுதி எல்லா மோட்டார் கோச்சுக்களுக்கும் எல்லா மோட்டார் லொறிகளுக்கும் மோட்டார் கார்களுக்கும், இரு நோக்கு வாகனங்களுக்கும், மோட்டார் ஹோம்ஸ், நாற்சக்கர சைக்கிள் அல்லது விசேட நோக்க வாகனங்களுக்கும் அஞ்சல் கட்டணங்கள் உட்பட | *4,500.00* |
| | | |
| *2.* | இலக்கத் தகடுகளின் முன்புற, பின்புற தொகுதி, தரை வாகனங்களுக்கு, அஞ்சல் கட்டணங்கள் உட்பட | *4,500.00* |
| | | |
| *3.* | இலக்கத் தகடுகளின் முன்புற, பின்புற தொகுதி, மோட்டார் முச்சக்கரவண்டிகளுக்கு அல்லது மோட்டார் முச்சக்கர வேன்களுக்கு, அஞ்சல் கட்டணங்கள் உட்பட | *3,500.00* |
| | | |
| *4.* | இலக்கத் தகடுகளின் முன்புற, பின்புற தொகுதி, கை உழவு இயந்திரம் அல்லது மோட்டார் சைக்கிள்களுக்கு, அஞ்சல் கட்டணங்கள் உட்பட | *3,000.00* |
| | | |
| *5.* | வியாபாரிகள், பழுதுபார்ப்பவர்கள், உற்பத்தியாளர்கள், பொருத்தி உருவாக்குபவர்கள், மூலப் பொருட்களினால் உருவமைப்பவர்கள், புத்தாக்கம் செய்பவர்கள், இசைவாக்கம் செய்பவர்கள், திரிபுபடுத்துபவர்கள் அல்லது நிர்மாணத்தை மாற்றுபவர்கள் ஆகியோருக்கான இலக்கத் தகடுகளின் முன்புற, பின்புற தொகுதி | *5000.00* |
| | | |
| *6.* | வெள்ளை அல்லது மஞ்சள் ஒளித்தெறிப்புப் பின்னணி இலக்கத் தகடு அளவு *520 மி.மீ110 மி.மீ.* | *2,000.00* |
| | | |
| *7.* | வெள்ளை அல்லது மஞ்சள் ஒளித்தெறிப்புப் பின்னணி இலக்கத் தகடு அளவு *280 மி.மீ180 மி.மீ.* | *2,000.00* |
| | | |
| *8.* | வெள்ளை அல்லது மஞ்சள் ஒளித்தெறிப்புப் பின்னணி இலக்கத் தகடு அளவு *280 மி.மீ200 மி.மீ.* | *2,000.00* |
| | | |
| *9.* | வெள்ளை ஒளித்தெறிப்புப் பின்னணி இலக்கத் தகடு அளவு *300 மி.மீ 80 மி.மீ.* | *1.500.00* |
| | | |
| *10.* | வெள்ளை அல்லது மஞ்சள் ஒளித்தெறிப்புப் பின்னணி இலக்கத் தகடு அளவு *240 மி.மீ130 மி.மீ.* | *1,500.00* |
| | | |
| *11.* | சிவப்பு ஒளித்தெறிப்புப் பின்னணி இலக்கத் தகடு அளவு *520 மி.மீ 110 மி.மீ.* அல்லது *280 மி.மீ180 மி.மீ.* | *2,500.00* |
| | | |
| *12.* | இலக்கத் தகட்டு அடையாள ஒட்டுத் துண்டு - அளவு *100 மி.மீ18 மி.மீ.* | *850.00* |
| | | |
| *13.* | இலக்கத் தகட்டு அடையாள ஒட்டுத் துண்டு - அளவு *100 மி.மீ18 மி.மீ.* | *1200.00* |
| | | |

| | *நிரல் I* | *நிரல் II* |
|---|---|---|
| | *விவரணம்* | *கட்டணம் (ரூபா)* |
| 14. | மோட்டார் சைக்கிள்கள், மோட்டார் முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் முச்சக்கர வான்கள் தவிர்ந்த அனைத்து மோட்டார் வாகனங்களுக்கும் நடப்பு இலக்கங்களிலிருந்து 10,000 வரையிலான விசேட இலக்கங்களை ஒதுக்கீடு செய்தல் | 100,000.00 |
| | | |
| 15. | மோட்டார் சைக்கிள்கள் மற்றும் மோட்டார் முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் முச்சக்கர வான்களுக்கு நடப்பு இலக்கங்களிலிருந்து 10,000 வரையிலான விசேட இலக்கங்களை ஒதுக்கீடு செய்தல் | 10,000.00 |
| | | |
| 16. | மோட்டார் சைக்கிள்கள், மோட்டார் முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் முச்சக்கரவான்கள் தவிர்ந்த அனைத்து மோட்டார் வாகனங்களுக்கும் நடப்பு இலக்கங்களிலிருந்து 20,000 வரையிலான விசேட இலக்கங்களை ஒதுக்கீடு செய்தல் | 200,000.00 |
| | | |
| 17. | மோட்டார் சைக்கிள்கள், மோட்டார் முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் முச்சக்கர வான்களுக்கு நடப்பு இலக்கங்களிலிருந்து 20,000 வரையிலான விசேட இலக்கங்களை ஒதுக்கீடு செய்தல் | 20,000.00 |
| | | |
| 18. | மோட்டார் சைக்கிள்கள் மற்றும் மோட்டார் முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் முச்சக்கர வான்கள் தவிர்ந்த அனைத்து மோட்டார் வாகனங்களுக்கும் நடப்பு இலக்கங்களிலிருந்து 30,000 வரையிலான விசேட இலக்கங்களை ஒதுக்கீடு செய்தல் | 300,000.00 |
| | | |
| 19. | மோட்டார் சைக்கிள்கள், மோட்டார் முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் முச்சக்கர வான்களுக்கு நடப்பு இலக்கங்களிலிருந்து 30,000 வரையிலான விசேட இலக்கங்களை ஒதுக்கீடு செய்தல் | 30,000.00 |
| | | |
| 20. | மோட்டார் சைக்கிள்கள், மோட்டார் முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் முச்சக்கர வான்கள் தவிர்ந்த அனைத்து மோட்டார் வாகனங்களுக்கும் நடப்பு இலக்கங்களிலிருந்து 40,000 வரையிலான விசேட இலக்கங்களை ஒதுக்கீடு செய்தல் | 400,000.00 |
| | | |
| 21. | மோட்டார் சைக்கிள்கள், மோட்டார் முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் முச்சக்கர வான்களுக்கு நடப்பு இலக்கங்களிலிருந்து 40,000 வரையிலான விசேட இலக்கங்களை ஒதுக்கீடு செய்தல் | 40,000.00 |
| | | |
| 22. | மோட்டார் சைக்கிள்கள், மோட்டார் முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் முச்சக்கர வான்கள் தவிர்ந்த அனைத்து மோட்டார் வாகனங்களுக்கும் நடப்பு இலக்கங்களிலிருந்து 50,000 வரையிலான விசேட இலக்கங்களை ஒதுக்கீடு செய்தல் | 500,000.00 |
| | | |
| 23. | மோட்டார் சைக்கிள்கள், மோட்டார் முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் முச்சக்கர வான்களுக்கு நடப்பு இலக்கங்களிலிருந்து 50,000 வரையிலான விசேட இலக்கங்களை ஒதுக்கீடு செய்தல் | 50,000.00 |
| | | |


**ஐந்தாம் அட்டவணை**

[ஒழுங்குவிதிகள் 20(2) மற்றும் 20(4)]

அடையாளங்காண் இலக்கத்தகடு ஒட்டுத்துண்டுகளின் பரிமாணங்களை விளக்கும் வரைபடம்


**வரைபடம் 1**

(அனைத்து பரிமாணங்களும் மில்லிமீற்றர்களில்)




**வரைபடம் 2**

(அனைத்து பரிமாணங்களும் மில்லிமீற்றர்களில்)




EOG 10 - 0033